DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 271/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for Prosecution	:	P.W.2

பெயர்	:	பாலாஜி	தொழில்	:
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:	குமாரசாமி	ஜாதி	:
கிராமம்	:		இனம்	:
தாலூக்கா	:		வயது	:
Mail ID	:		Mobile No.	:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 27.01.2026.

311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. சம்பவ ரோடு தென் வடல் ரோடு என்றால் சரிதான். ரோட்டின் இருபுறமும் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எந்த கடையில் டீ குடித்ததாக சொல்லவில்லை என்றால சரிதான். இறந்த நபருக்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். இறந்வதவர் அவரது தோட்டத்திலிருந்து தினமும் இரு நேரமும் பால் கறந்து வந்து சொசைட்டியில் ஊற்றுவது வழக்கம் என்றால் ஆமாம். அடிபட்ட நபருடன் நீங்கள் மருத்துவமனைக்கு வந்தீர்களா என்றால் ஆமாம் அடிபட்ட நபரை வேல் மருத்துவரனை எடுத்துச் சென்றீர்கள் என்றால் ஆமாம். வேல் மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள் என்றால் வந்தார்கள்.
2. நடந்த விவரத்தை போலீசாரிடம் நீங்கள் கூறினீர்களா என்றால் ஆமாம். நீங்கள் சொன்ன விவரம் போலீசார் பதிவு செய்து கொண்டார்களா என்றால் ஆமாம். அதில் நீங்கள் கையெழுத்து செய்திர்களா என்றால் ஆமாம். கையெழுத்து போட்ட போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 9.30 மணி இருக்கும். அப்போது தான்

நீங்கள் சம்பவம் குறித்து முதல் முதலாக புகார் வாக்குமூலம் கொடுத்தீர்கள் என்றால் ஆமாம்.

3. மீண்டும் நீங்கள் கோவை சென்றீர்கள் என்றால் ஆமாம். 19 ஆம் தேதி விபத்து நடந்த நிலையில் கோயம்புத்தூர் சென்ற பிறகு மீண்டும் 21 ஆம் தேதி தான் போலீசாரை பார்த்தீர்கள் என்றால் 19 ம்தேதி அடிபட்ட நபர் கோவை மருத்துவமனையில் 20 ஆம் தேதி இரவு இறந்து விட்டார். எத்தனை மணிக்கு போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் அப்போது நான் கோவை மருத்துவமனையில் இல்லை. உங்களை 19 ஆம் தேதி விசாரித்த போலீசார் மீண்டும் போலீசார் எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் இருபதாம் தேதி.
4. 20 ம் தேதி போலிசார் உங்களை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 9.00 மணிக்கு இருபதாம் தேதி. அதன் பின்னிட்டு போலீசார் உங்களை எப்போதும் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவ தினத்தன்று அடிபட்ட நபர் மது அருந்து இருந்தார் என்றால் இல்லை.
5. வடக்கே இருந்து தெற்கு நோக்கி வரும் வாகனங்களுக்கு ரோட்டின் கிழபுறம் தான் சரியான பாதை என்றால் ஆமாம். சம்பவ நடந்த ரோடு போக்குவரத்து மிகுந்த ரோடு என்றால் ஆமாம். ஒரு நபர் படி இருபுறம் பார்த்துதான் ரோட்டை கடக்க வேண்டும் என்றால் ஆமாம். இவர் பார்க்காமல் திடீரென மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி போனது தான் விபத்திற்கு காரணம் என்றால் ஆமாம்.
6. இந்த விபத்தானது உங்கள் நண்பனின் தகப்பனாரின் அஜாக்கிரதையாகலும் கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்றால் சரி அல்ல. நண்பருக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.